36. கீழ்க்கண்டவற்றுள் 2 - 200 மைக்ரான் அளவுடையது எது

(1) வைரஸ் (2) பாக்டீரியா

(3) புரோட்டோசோவா (4) கிளாமிடோமோனாஸ்

37. கீழ்க்கண்டவற்றுள் வேறுபட்டது எது?

(1) பாரமீசியம் (2) யூக்ளினா (3) பிளாஸ்மோடியம் (4) பாக்டீரியா

38. பின்வருவனவற்றுள் தவறான இணை எது?

(1) பாரமீசியம் - சிலியா

(2) யூக்ளினா - கசையிழை

(3) அமீபா - போலிக்கால்கள்

(4) பிளாஸ்மோடியம் - குறு இழை

39. பொருத்துக.

(1) சிலியேட்டா - a. யூக்ளினா

(2) பிளாஜெல்லேட்டா - b. பிளாஸ்மோடியம்

(3) சூடோபோடியா - c. பாரமீசியம்

(4) ஸ்போரோசோவா - d. அமீபா

(i) 1 - a 2 - d 3 - c 4 - b (ii) 1 - c 2 - b 3 - d 4 - a

(iii) 1 - c 2 - a 3 - d 4 - b (iv) 1 - c 2 - a 3 - b 4 - d

40. கீழ்க்கண்டவற்றுள் இணைவு மற்றும் ஸ்போர் உருவாதல் முறையில் இனப்பெருக்கம் நடைபெறுவது எது?

(1) வைரஸ் (2) பாக்டீரியா (3) அமீபா (4) பூஞ்சை

41. "குயிட்ஸ்பெல்ட் ஜேக்கப்" என்ற நோய் கீழ்க்கண்ட எது ஏற்படுத்துகிறது?

(1) பாக்டீ யா (2) விரியான்கள் (3) பூஞ்சை (4) பிரியான்கள்

42. கீழ்க்கண்டவற்றுள் எந்த நோயை "பிரியான்கள்" ஏற்படுத்துகிறது?

(1) காலரா (2) டைபாய்டு (3) குரு (4) மலேரியா

43. "பிரியான்கள்" பற்றிய கீழ்க்கண்ட கருத்துக்களில் தவறானது எது?

(i) இவற்றில் டி.என்.ஏ இல்லை (ii) இவை திடீர் மாற்றமடைந்த புரதம்

(iii) இவற்றில் ஆர்.என்.ஏ இல்லை (iv) இவை காச நோயை ஏற்படுத்துகிறது

(1) i மற்றும் iv (2) iii மட்டும் (3) i மட்டும் (4) iv மட்டும்

LIVEWORKSHEETS

44. "விரியான்கள்" பற்றிய கருத்துக்களில் தவறானது எது?

(i) இது ஒரு முழுமையான வைரஸ் துகள்

(ii) கேப்சிட் என்ற வெளிப்புற புரத உறையை கொண்டுள்ளது

(iii) இது நியூக்ளிக் அமிலத்தை கொண்டிருக்கவில்லை

(iv) இது உயிருள்ள திசுக்களில் பாதிப்பை ஏற்படுத்துவது இல்லை

(1) i மற்றும் iv (2) iii மற்றும் ii (3) i மற்றும் iii (4) iii மற்றும் iv

45. பெனிசிலின் என்ற மருந்தைக் கண்டுபிடித்தவர் யார்?

(1) அலெக்ஸாண்டர் ஃப்ளமிங் (2) அலெக்ஸாண்டர் கிரஹாம்பெல்

(3) அலெக்ஸாண்டர் ஸ்பைரின் (4) அலெக்ஸாண்டர் வான் ஹம்போல்ட்

46. பெனிசிலின் மருந்து எந்த ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது?

(1) 1918 (2) 1928 (3) 1938 (4) 1982

47. பெனிசிலியம் கிரைசோஜீனம் என்ற பூஞ்சையில் இருந்து தயாரிக்கப்படும் எதிர் உயிர்க்கொல்லி எது?

(1) அனால்ஜின் (2) நோவால்ஜின் (3) பெனிசிலின் (4) டெராமைசின்

48. பெனிசிலின் எந்த நோய்களை குணப்படுத்தும் மருந்தாக பயன்படுகிறது?

(1) காசநோய் மற்றும் புற்றுநோய் (2) புற்று நோய் மற்றும் எய்ட்ஸ்

(3) டெட்டனஸ் மற்றும் டிப்தீரியா (4) டெட்டனஸ் மற்றும் புற்றுநோய்

49. ஸ்ட்ரெப்டோமைசின் என்ற எதிர் உயிர்க்கொல்லி கீழ்க்கண்ட எதில் இருந்து பெறப்படுகிறது?

(1) பூஞ்சை (2) பாக்டி யா (3) புரோட்டோசோவா (4) வைரஸ்

50. "பிளேக்" என்ற நோய்க்கு மருந்தாக பயன்படுவது எது?

(1) நியோமைசின் (2) கானாமைசின் (3) டெராமைசின் (4) ஸ்ட்ரெப்டோமைசின்

51. பெரியம்மைக்கான தடுப்பூசியைக் கண்டுபிடித்தவர் யார்?

(1) எட்வர்ட் டெல்லர் (2) எட்வர்ட் ஜென்னர்

(3) ரோசாலிண்ட் ஃப்ராங்ளின் (4) ஜேம்ஸ் டி வாட்சன்

52. "வாக்சினேஷன்" என்ற சொல் முதன் முதலில் யாரால் உருவாக்கப்பட்டது?

(1) அலெக்ஸாண்டர் பிளம்மிங் (2) எட்வர்ட் ஜென்னர்

(3) அலெக்ஸாண்டர் கிரஹம்பல் (4) அலெக்ஸாண்டர் வான் ஹம்போல்ட்

53. தடுப்பூசிகள் பற்றிய கீழ்க்கண்ட கருத்துகளில் சரியானது எது?

(அ) இறந்து போன நுண்ணுயிரிகளிடமிருந்து பெறப்படுகிறது

LIVEWORKSHEETS

(ஆ) பலவீனமாக்கப்பட்ட நுண்ணுயிரிகளிடமிருந்து பெறப்படுகிறது

(இ) மூலிகைத் தாவரங்களிலிருந்து பெறப்படுகிறது

(ஈ) வேதிப்பொருள்களின் கலவைகளிலிருந்து பெறப்படுகிறது

(1) அ மற்றும் ஈ (2) இ மற்றும் ஆ (3) அ மற்றும் ஆ (4) இ மற்றும் ஈ

54. MMN தடுப்பூசி கீழ்கண்ட எந்த நோய்களுக்கு வழங்கப்படுகிறது?

(அ) தட்டம்மை (ஆ) பொன்னுக்கு வீங்கி

(இ) ஆஸ்துமா (ஈ) ரூபெல்லா

(1) அ, ஆ மற்றும் இ (2) ஆ, இ மற்றும் ஈ (3) அ, இ மற்றும் ஈ (4) அ, ஆ மற்றும் ஈ

55. BCG என்ற தடுப்பூசி கீழ்க்கண்ட எந்த நோய்க்கு வழங்கப்படுகிறது?

(1) எய்ட்ஸ் (2) புற்றுநோய் (3) காசநோய் (4) அம்மை

56. பயறுவகைத் தாவரங்களின் வேர்முடிச்சுகளில் வாழும் பாக்டீரியா எது?

(1) விப்ரியோ காலரே (2) சூடோமோனாஸ் (3) ரைசோபியம் (4) லாக்டோபேசில்லஸ்

57. கீழ்க்கண்டவற்றுள் எந்த பாக்டீரியா நைட்ரஜன் நிலைநிறுத்தத்தில் பங்கு பெறுவது இல்லை?

(1) ரைசோபியம் (2) சயனோ பாக்டீரியா

(3) நாஸ்டாக் (4) சூடோமோனாஸ்

58. பருத்தித் தாவரங்களில் பூச்சிகளைக் கட்டுப்படுத்த உதவும் பாக்டீரியா எது?

(1) ரைசோபியம் (2) நாஸ்டக்

(3) விப்ரியோ காலரே (4) பேசில்லஸ் துரின்ஜியன்சிஸ்

59. தாவர வேர்களுக்குப் பாதுகாப்பளித்துத் தாவர நோய்க் கிருமிகளை கட்டுப்படுத்தும் பூஞ்சை?

(1) டிரைக்கோடெர்மா (2) பெனிசிலியம் கிரைசோஜீனம்

(3) பெனிசிலியம் நொட்டேட்டம் (4) ஈஸ்ட்

60. "பாக்குலோ வைரஸ்கள்" தாவரங்களில் கீழ்க்கண்ட எவற்றைக் கட்டுப்படுத்துகிறது?

(அ) பாக்டீரியாக்களை (ஆ) பூச்சிகளை

(இ) கணுக்காலிகளை (ஈ) பூஞ்சைகளை

(i) அ மற்றும் இ (ii) ஆ மற்றும் ஈ (iii) அ மற்றும் ஈ (iv) ஆ மற்றும் இ

61. மெத்தனோ பாக்டீரியங்கள் கீழ்க்கண்ட எந்நிகழ்வில் பயன்படுத்தப்படுகிறது?

(1) உணவு பதப்படுத்துதல்

(2) நொதித்தல் மூலம் ஆல்கஹால் உற்பத்தியில்

(3) காற்றில்லா சூழ்நிலையில் நடைபெறும் கழிவுநீர் சுத்திகரிப்பு

LIVEWORKSHEETS

(4) உணவு பாதுகாப்பில்

62. மெத்தனோஜென்கள் எனப்படும் பாக்டீரியங்கள் கீழ்க்கண்ட எந்நிகழ்வில் பயன்படுகிறது?

(1) உயிரி வாயு உற்பத்தி (2) உணவு பதப்படுத்துதல்

(3) நொதித்தல் நிகழ்வு மூலம் மருந்து தயாரிப்பு (4) ஆல்கஹால் தயாரிப்பு

63. ஆல்கஹால் மற்றும் திராட்சை ரசம் தயாரிப்பில் பயன்படுவது எது?

(1) வைரஸ் (2) பாக்டீரியா (3) ஈஸ்ட் (4) புரோட்டோசோவா

64. ஆளித்தாவர நார்களில் இருந்து லினென் நூல் இழைகள் தயாரிப்பில் பயன்படும் பாக்டீரியா ?

(1) சூடோமோனாஸ் ஏருஜினோஸா (2) நாஸ்டக்

(3) விப்ரியோ காலரே (4) பேசில்லஸ் துரின்ஜியன்சிஸ்

65. அடுமனைகளில் ரொட்டி மற்றும் கேக் தயாரிப்பில் பயன்படுவது எது?

(1) வைரஸ் (2) பாக்டீரியா (3) ஈஸ்ட் (4) புரோட்டோசோவா

66. ரொட்டியின் சத்து அதிகரிப்பிற்காக மாவுடன் சேர்க்கப்படுவது எது?

(1) வால்வாக்ஸ் (2) ஸ்பைரூலினா (3) குளோரெல்லா (4) கிளாமிடோமோனாஸ்

67. தயிர் மற்றும் பன்னீர் தயாரிப்பில் பயன்படும் பாக்டீரியா எது?

(1) நாஸ்டக் (2) பேசில்லஸ் துரின்ஜியன்சிஸ்

(3) லேக்டோ பேசில்லஸ் (4) ரைசோபியம்

68. உணவு செரிமானத்திற்கு உதவும் மனித குடலில் வாழும் பாக்டீரியா எது?

(1) லேக்டோ பேசில்லஸ் (2) பேசில்லஸ் துரின்ஜியன்சிஸ்

(3) லாக்டோபேசில்லஸ் அசிட்டோஃபிலஸ் (4) எ.கோலை

69. மனித குடலில் வாழ்ந்து, வைட்டமின் K மற்றும் வைட்டமின் B தயாரிப்பில் உதவும் பாக்டீரியா எது?

(1) பேசில்லஸ் துரி ஞ்ஜியன்சிஸ் (2) எ.கோலை

(3) லேக்டோ பேசில்லஸ் (4) ரைசோபியம்

70. நுண்ணுயிரிகள் மூலம் நடைபெறும் நொதித்தல் நிகழ்வின் மூலம் கீழ்க்கண்ட எது உருவாவது இல்லை?

(1) ஈதர் (2) அமிலம் (3) ஆல்கஹால் (4) எஸ்டர்கள்

LIVEWORKSHEETS